**IN THE COURT OF THE ADDITIONAL SUBORDINATE JUDGE'S, HOSUR.**

அ.வ.எண். 247/2017 18.07.2022

வா.சா. 4. மஞ்சுநாத்

வா.சா.4 திரும்ப அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்யப்பட்டார்.

நீதமன்றத்தில் இருந்து சாட்சி அளிப்பதற்கு அழைப்பாணை எதுவும் வந்ததா என்றால் இல்லை. யார் என்னை சாட்சியம் அளிப்பதற்கு அழைத்து வந்தார்கள் என்றால் இரண்டாம் வாதி. வாதியினுடைய சொத்துக்கள் பற்றிய விவரம் வாதி சொல்லி தான் தெரியும் என்று சொன்னால் சரியல்ல, நான் அதே ஊரில் தான் வசிக்கிறேன். வாதியின் பெற்றோர் யார், சொத்துக்கள் எது ,அது எங்கு உள்ளது என்ற விவரம் எனக்குத் தெரியுமா என்றால் தெரியும், அதே ஊரில் தான் உள்ளது. தாவா சொத்து எங்கு உள்ளது என்றால் திகடரப்பள்ளி. தாவா சொத்து அத்திமுககத்தில் உள்ளது என்று சொன்னது தவறா என்றால் தாவா சொத்து திகடரப்பள்ளியில் தான் உள்ளது. தாவா சொத்தின் சர்வே எண் என்னவென்றால் எனக்குத் தெரியாது, ஆனால் 3,4 ஏக்கர் நிலம் உள்ளது மட்டும் தெரியும். எத்தனை சர்வே எண்கள் தாவா சொத்தில் உள்ளது என்றால் எனக்குத் தெரியாது, இரண்டோ, மூன்றோ இருக்கலாம். ஒவ்வொரு சர்வே எண்ணிலும் எவ்வளவு விஸ்தீரண சொத்துக்கள் உள்ளது என்றால் எனக்குத் தெரியாது. தாவா சொத்து இதற்கு முன்பு யாருக்கு பாத்தியப்பட்டது என்றால் போடுரப்பா. தற்போது அவர் உயிருடன் உள்ளாரா என்றால் இல்லை. போடுரப்பாவிற்கு எத்தனை குழந்தைகள் என்றால் முதல் 2 ஆண்கள் உள்ளனர், பெண் குழந்கைள் எத்தனை பேர் என்று எனக்கு நினைவு இல்லை. போடுரப்பாவின் மகன்கள் பெயர் என்னவென்றால் வெங்கடேசப்பா மற்றும் பாப்பையா, போடுரப்பாவிற்கு 2 மனைவிகள் இருந்தனர். அவர்களுடைய பெயர் என்னவென்றால் ஒருவருடைய பெயர் வெங்கடம்மா, மற்றொரு மனைவி பெயர் எனக்குத் தெரியாது. மேற்படி போடுரப்பாவின் இரு மகன்கள் எந்த மனைவிக்கு பிறந்தனர் என்றால் பாப்பையா என்பவர் வெங்கடம்மாவிற்கு பிறந்தவர், வெங்கடேசப்பா யாருக்கு பிறந்தவர் என்று தெரியவில்லை. வெங்கடேசப்பாவுடன் வேறு யாரும் பிறந்தார்களா என்றால் தெரியாது. பாப்பையாவுடன் பிறந்தவர்கள் யார் என்றால் பாப்பம்மா , முனியம்மா, ரத்னம்மா, இவர்கள் பெயர் மட்டும் தான் தெரியும், மற்றவர்கள் பெயர் தெரியாது. நான் ஊரை விட்டு சென்று எவ்வளவு நாட்கள் ஆகிறது என்றால் அதே ஊரில் தான் இருக்கிறோம், வேலைக்காக 2வருடங்கள் பெங்களூரில் வசித்து வருகிறேன். வாதிகள் எந்த ஊரில் வசிக்கிறார்கள் என்றால் Electronic City க்கு அருகில் உள்ள மாரகண்டப்பள்ளி. அவர்களுடைய வீடு அவர்களுக்கு சொந்தமானது என்றால் சரிதான். பாப்பையா தான் அந்த வீட்டை வாதிகள் பெயரில் பெங்களூரில் வாங்கினார் என்றால் அது அவர்களுடைய சொந்த வீடு என்பது மட்டும் தான் தெரியும், யார்

வாங்கினார்கள் , யார் பெயரில் உள்ளது என்ற விவரம் தெரியாது. 2000 ம் வருடத்திலேயே போடுரப்பாவின் இரு மனைவிகளின் பிள்ளைகள் பாகம் பிரித்துக்கொண்டு அவரவருக்கு ஒதுக்கப்பட்ட பாகதில் அவரவர் சுவாதீனத்தில் உள்ளனர் என்றால் சரிதான். பாப்பையா தன்னுடைய சகோதரிகளுடன் பாகப்பிரிவினை செய்து கொண்டார் என்று சொன்னால் அதை பற்றி எனக்குத் தெரியாது. அந்த பாகப்பிரிவினையில் பாப்பையாவிற்கு விலை மதிப்பு மிக்க சொத்துக்களும், அவருடைய சகோதரிகளுக்கு விலை மதிப்பு குறைந்த சொத்துக்களும் ஒதுக்கப்பட்டது என்று சொன்னால் அதை பற்றி எனக்குத் தெரியாது. பிதுராஜ்ய சொத்துக்களில் அவரவருக்கு கிடைத்த சொத்துக்களில் அவரவர் தனி தனியாக சுவாதீனத்தில் உள்ளனர் என்றால் சரிதான். வாதிகள் இருவரும் முதல் பிரதிவாதியின் பிள்ளைகள் என்றால் சரிதான். ஏற்கனவே இரு மனைவிகளின் பிள்ளைகளுக்கிடையே பாகப்பிரிவினை ஆகிவிட்ட காரணத்தினால் வாதிகள் இருவரும் முதல் பிரதிவாதியின் பிள்ளைகள் என்ற முறையில் அவருக்கு ஒதுக்கப்பட்ட சொத்துக்களில் தான் பாகம் கேட்க முடியும் என்றாலும் , மற்ற சொத்துக்களில் பாகம் கேட்க முடியாது என்று சொன்னால் சரிதான்.

E SASIKALA
Principal Subordinate Judge,
Digitally signed by E SASIKALA
Location: Hosur
Date: 2022.07.18 18:15:41 +0530